**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, தஞ்சாவூர்.**

**முன்னிலை: செல்வி. S. T. கனிமொழி, L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.I, தஞ்சாவூர்.**

2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 01-ம் நாள் திங்கள் கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் வைகாசித் திங்கள் 18 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.369/2022**

CNR NO.TNTJ05-002889-2022

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,

நகர கிழக்கு காவல்நிலையம், தஞ்சாவூர்.

குற்ற எண்.660/2022. ....குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

1) அர்ஜுன், வயது 27/2026, த/பெ. பவுன்ராஜ்,

எண்.2 ஏ, பத்துக்கட்டு, கீரைக்கார தெரு, கரந்தை, தஞ்சாவூர்.

2) திவாகர், வயது 26/2026, த/பெ. அன்பழகன்,

எண்.79-B, கீரைக்கார தெரு, கரந்தை, தஞ்சாவூர்.

3) மணிகண்டன், வயது 28/2026, த/பெ. ஸ்டாலின்,

கீரைக்கார தெரு, கரந்தை, தஞ்சாவூர்.

(இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் கடந்த 23.03.2026 அன்று சிசி எண்.191/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.) ....எதிரிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 19.12.2022 அன்று சி.சி.எண்.369/2022 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, 01.06.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டதில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. பார்த்தசாரதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....,

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.06.01 15:37:53 +0000

**தீர்ப்புரை**

I) **குற்ற அறிக்கையின் சுருக்கம்-**

கடந்த 04.06.2022 ம் தேதி இரவு 01.00 மணியளவில் வாதி பிரசாந்தின் அத்தை மகன் விஜய் வாதிக்கு போன் செய்து இவ்வழக்கின் 1வது எதிரி தன்னை கரந்தை குளத்து மேட்டு தெருவில் உள்ள முனியாண்டவர் கோவிலுக்கு வரச்சொல்லியிருப்பதாகவும், தன்னோடு நீயும் வாடா என்று தன்னை குளத்து மேட்டு தெரு முனியாண்டவர் கோவிலுக்கு அழைத்து சென்று அங்கு நின்றபோது இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் விஜயை பார்த்து தேவடியா மகனே, குச்சிகாரி மகனே, உன்னை வரச்சொன்னா அடிக்க ஆள் கூட்டிவாரியா என்று கூறி, 1வது எதிரி தனது கையில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்தபோது விஜய் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், வாதி பிரசாந்த் தடுமாறி கீழே விழுந்த போது, 2, 3 எதிரிகள் வாதியை பிடித்துக்கொண்டும், 1வது எதிரி தனது கையில் வைத்திருந்த அருவாளால் வாதியின் இடது முழங்காலில் ஓங்கி வெட்டியும், அருவாள் புடங்காலினால் வாதியின் பின்தலை, வலது முழங்கையில் அடித்து காயம் ஏற்படுத்தியும், தனது கையில் வைத்திருந்த அருவாளை காட்டி, என்னைக்கு இருந்தாலும் உங்க இரண்டு பேரோட சாவு என் கையிலதாண்டா என்று மிரட்டியும், 2, 3 எதிரிகள் வாதியை காலால் உதைத்தும் குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, தஞ்சாவூர் நகர கிழக்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(2)ன் கீழும், 2, 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 342 ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.01 15:38:02 +0000

II) இந்நிலையில் இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் கடந்த 23.03.2026 அன்று சிசி எண்.191/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் வழக்கு விசாரணையின் போது இவ்வழக்கின் 3 வது எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், பார்வையிட்டும், 3 வது எதிரி மீது இதச பிரிவுகள்.294(b), 342 ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, குற்றச்சாட்டை விளக்கிக் கூறி வினவியபோது 3 வது எதிரி மேற்படி குற்றங்களை மறுத்து குற்றவாளி இல்லை என்றார். எனவே அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

III) இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1, அசா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அசாஆ.1 முதல் அசாஆ.10 வரையான சான்றாவணங்கள் மற்றும் அசாபொ.1 சான்றுப்பொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

IV) **அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு யாதெனில்,**

IV.1) இவ்வழக்கில் அ.சா.1 பிரசாந்த் தன்னுடைய முதல் விசாரணையில் "கடந்த 2023 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை என்றும், தான் சாலையில் சென்று கொண்டிருந்தபோது தன்னுடன் சிலர் சண்டையிட்டதாகவும், தனக்கு காலில் காயம் ஏற்பட்டதாகவும், தற்போது தானும் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.01 15:38:08 +0000

IV.2) அடுத்தபடியாக அ.சா.2 குணசேகரன் சிறப்பு உதவி ஆய்வாளர் தன்னுடைய முதல் விசாரணையில் "கடந்த 04.06.2022 ம் தேதி 21.00 மணியளவில் தலைமை காவலர் நிலைய பொறுப்பிலிருந்தபோது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த பிரசாந்த் என்பவரின் காயத்தகவலை பெற்று, மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அவரிடம் நடந்த சம்பவத்திற்கு புகார் வாக்குமூலம் பெற்று, நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.660/2022 சபி.294(b), 324, 506(ii) இதசவின் படி வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், பின்பு உதவி ஆய்வாளர் வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 04.06.2022 ம் தேதி காலை 22.00 மணியளவில் சம்பவயிடத்திற்கு சென்று அங்குள்ள சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பின்பு மகஜர் சாட்சிகள் மற்றும் இதர பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு அவர் வழக்கினை மேல்கட்ட விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு. சத்தியன் பார்வைக்கு வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

IV.3) மேலும் அசா.2 ன் சாட்சியத்தில், பின்பு எதிரியை தேடி வந்த நிலையில் கிடைத்த ரகசிய தகவலின் படி 10.09.2022 ம் தேதி தஞ்சை கரந்தை கீரைக்காரக்தெரு, பத்துகட்டு சர்ச் அருகில் நின்று கொண்டிருந்த இவ்வழக்கின் எதிரி அர்ஜீன் போலீஸ் பார்டிகளை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தபோது அவர் தாமாக குற்றத்தை ஒப்புகொண்டதாகவும், பின்பு அவரை

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.01 15:38:15 +0000

காரணம் கூறி கைது செய்து, பின்பு 1 வது எதிரி  தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை  சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும், 1வது எதிரி எடுத்து ஆஜர் செய்த 42 செமீ நீளமுள்ள அரிவாள்-1 பூனுடன் கூடிய கைப்பிடி ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியும், பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும், வழக்கு சொத்தினை நீதிமன்ற பாதுக்காபப்பு படிவம் 91   மூலம் அனுப்பி வைத்துள்ளதாகவும், பின்பு 2 வது எதிரி திவாகர் (எ) அந்நியன் திவாகர் 09.10.2022 ம் தேதி தஞ்சை கரந்தை கீரைக்காரக்தெரு, பத்துகட்டு சர்ச் அருகில் நின்று கொண்டிருந்தவர் போலீஸ் பார்டிகளை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தபோது அவர் தாமாக குற்றத்தை ஒப்புகொண்டதாகவும், பின்பு அவரை காரணம் கூறி கைது செய்து, எதிரியை நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

IV.4) மேலும் அசா.2 ன் சாட்சியத்தில், பின்பு 3 வது  எதிரி மணிகண்டன் 20.10.2022 ம் தேதி  தஞ்சை கரந்தை கீரைக்காரக்தெரு, பத்துகட்டு சர்ச் அருகில் நின்று கொண்டிருந்தவர் போலீஸ் பார்டிகளை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தபோது அவர் தாமாக குற்றத்தை ஒப்புகொண்டதாகவும், பின்பு அவரை காரணம் கூறி கைது செய்து, எதிரியை நிலையம் வந்து திரேக

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.01 15:38:21 +0000

பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும், பின்பு உதவி ஆய்வாளர் திரு. சத்தியன் பட்டியல் சாட்சிகள் உதவி ஆய்வாளர் திரு. குமார் அவர்களிடம் கூறிய தகவலையே கூறியதால், அவர் புதிததாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், உதவி ஆய்வாளர் திரு, சத்தியன் பட்டியல் சாட்சிகளை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு இவ்வழக்கில் தனது புலன் விசாரணை முடித்து கொண்ட உதவி ஆய்வாளர் சாட்சிகளின் வாக்குமூலங்களின் இருந்தும், தனது புலன் விசாரணையிலிருந்தும் மேற்படி எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது மேற்படி இதச பிரிவுகளின் படி 13.12.2022 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

V) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 புகார்தாரராகவும், அ.சா.2 சம்பவத்தை புலன் விசாரணை மேற்கொண்ட புலன்விசாரணை அதிகாரி சிறப்பு உதவி ஆய்வாளர் குணசேகரன் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

VI) இந்நிலையில் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பாதகமான சங்கதிகளை குறித்து குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எடுத்துக்கூறி விளக்கி வினவிய போது அரசு தரப்பு சாட்சியம் பொய் என்றும், தனது தரப்பில் விசாரிக்க

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.01 15:38:27 +0000

சாட்சிகள் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

VII) **இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், 3 வது எதிரி மீது இதச பிரிவுகள்.**294(b), 342 **ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசுத் தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பது தான்.**

1) இவ்வழக்கில் அரசு தரப்பில் ஆஜரான அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா.1, அ.சா.2 சாட்சிகள் அசாஆ.1 முதல் அசாஆ.10 வரையான சான்றாவணங்கள் மற்றும் அசாபொ.1ன் படியாக, 3 வது எதிரி மீது இதச பிரிவுகள்.294(b), 342 ன் கீழான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே 3 வது எதிரியை மேற்படி குற்றத்தின் படியாக தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

2) 3 வது எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சம்பவத்தை பற்றி புகார் கொடுத்த சாட்சியான அசா.1 தனது முதல் விசாரணையில் "கடந்த 2023 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை என்றும், தான் சாலையில் சென்று கொண்டிருந்தபோது தன்னுடன் சிலர் சண்டையிட்டதாகவும், தனக்கு காலில் காயம் ஏற்பட்டதாகவும், தற்போது தானும் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டதாகவும்" சாட்சியம் அளித்துள்ளதாலும், அ.சா.2 விசாரணை அதிகாரி சாட்சியம் மட்டுமே 3 வது எதிரி மீது இதச பிரிவுகள்.294(b), 342 ன் கீழான குற்றத்தினை நிரூபணம் செய்யக்கூடியதாக இல்லை என்றும், எனவே 3 வது எதிரி குற்றவாளி அல்ல என தீர்மானித்து

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.01 15:38:34 +0000

விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

3) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

4) அரசு தரப்பு வழக்கின்படி கடந்த 04.06.2022ம் தேதி இரவு 01.00 மணியளவில் வாதியின் அத்தை மகன் விஜய் வாதிக்கு போன் செய்து இவ்வழக்கின் 1வது எதிரி தன்னை கரந்தை குளத்து மேட்டு தெருவில் உள்ள முனியாண்டவர் கோவிலுக்கு வரச்சொல்லியிருப்பதாகவும், தன்னோடு நீயும் வாடா என்று தன்னை குளத்துமேட்டு தெரு முனியாண்டவர் கோவிலுக்கு அழைத்து சென்று அங்கு நின்றபோது இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் விஜயை பார்த்து தேவடியா மகனே, குச்சிகாரி மகனே, உன்னை வரச்சொன்னா அடிக்க ஆள் கூட்டிவாரியா என்று கூறி, 1வது எதிரி தனது கையில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்தபோது விஜய் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், வாதி பிரசாந்த் தடுமாறி கீழே விழுந்த போது, 2, 3 எதிரிகள் வாதியை பிடித்துக்கொண்டும், 1வது எதிரி தனது கையில் வைத்திருந்த அருவாளால் வாதியின் இடது முழங்காலில் ஓங்கி வெட்டியும், அருவாள் புடங்காலினால் வாதியின் பின்தலை, வலது முழங்கையில் அடித்து காயம் ஏற்படுத்தியும், தனது கையில் வைத்திருந்த அருவாளை காட்டி, என்னைக்கு இருந்தாலும் உங்க இரண்டு பேரோட சாவு என் கையிலதாண்டா என்று மிரட்டியும், 2, 3 எதிரிகள் வாதியை காலால் உதைத்தும் குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, தஞ்சாவூர் நகர கிழக்கு காவல்நிலைய உதவி ஆய்வாளரால் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(2)ன் கீழும், 2, 3

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.01 15:38:40 +0000

எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 342 ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இந்நிலையில் அசா.1 தனது முதல் விசாரணையில் "கடந்த 2023 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை என்றும், தான் சாலையில் சென்று கொண்டிருந்தபோது தன்னுடன் சிலர் சண்டையிட்டதாகவும், தனக்கு காலில் காயம் ஏற்பட்டதாகவும், தற்போது தானும் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் அசா.1 எதிரியுடன் சமாதானமாகி சென்றுள்ளதாக முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

6) இந்நிலையில் நமது மாண்பமை உச்சநீதிமன்றம் முன்தீர்ப்புகளான **மோகன் அபோட் எதிர் பஞ்சாப் அரசு** 2008 (3) MLJ Crl 212 SC **மற்றும் மருத்துவர் அரவிந்த பர்சால் எதிர் மத்திய பிரதேச அரசு** 2008 (3) MLJ Crl 1517 SC என்ற முன்தீர்ப்புகளின் சாரம்சம் என்னவென்றால்,

**"தனி நபர் சார்ந்த எந்த ஒரு பிரச்சனையிலும் அரசு தரப்புக்கு சாதகமான முடிவினை எட்ட முடியாத நிலையில் வழக்கு இருக்குமேயானால் அந்த வழக்கை நிலுவையில் வைத்திருப்பது ஓர் ஆடம்பரமே என்பதால் நீதிமன்றமே குற்றவியல் நடவடிக்கைகளில் பொதுவான சமாதானத்தை ஏற்றுக்கொண்டு நீதிமன்றத்தின் நேரத்தை சேமித்து அதை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண்பதில் செலவிட முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது."**

மேலும் முக்கிய சாட்சி சமாதானத்தின் அடிப்படையில் வழக்கை மேல் நடத்த

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.01 15:38:46 +0000

விரும்பாதபட்சத்தில் குற்ற வழக்கை மேல் நடத்துவது சட்டத்திற்கு புறம்பான ஒரு செயல் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

7) இந்நிலையில் அரசு தரப்பு சாட்சியான முக்கிய சாட்சியான புகார்தாரர் அசா.1 எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதாக கூறியுள்ளதால், காவல்துறையினர் சாட்சியம் மட்டுமே குற்றம்சாட்டப்பட்டவருக்கு தண்டனை பெற்றுத்தர போதுமான சாட்சியாக அமையவில்லை. ஆகவே அரசு தரப்பு வழக்கை போதிய சாட்சியத்தின் அடிப்படையில் அரசு நிரூபிக்க தவறிவிட்டமையால் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அளித்து குற்றஞ்சாட்டப்பட்டவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

VIII) இறுதியாக அரசு தரப்பு குற்றஞ்சாட்டப்பட்ட 3 வது எதிரி மீது இதச பிரிவுகள்.294(b), 342 ன் கீழ் சுமத்திய குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியதால் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அளித்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவரை மேற்கண்ட பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. (இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் கடந்த 23.03.2026 அன்று சிசி எண்.191/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.)

8) இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தடயப்பொருளுக்கான உத்தரவு இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வழக்கான சிசி எண்.191/2026 வழக்கில் பகரப்படும்.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.01 15:38:52 +0000

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 01-ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.06.01 15:38:58 +0000
நீதித்துறை நடுவர் எண்.I,

தஞ்சாவூர்.

**அரசு தரப்பு விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

அ.சா.1 -- திரு. பிரசாந்த் (புகார்தாரர்)

அ.சா.2 -- திரு. குணசேகரன் (சிறப்பு உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | எந்த சாட்சியின் மூலம் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 04.06.2022 | புகார் வாக்குமூலத்திலுள்ள அசா.1ன் கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 04.06.2022 | காயத்தகவல் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | 04.06.2022 | புகார் வாக்குமூலம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | 04.06.2022 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | 04.06.2022 | பார்வை மகசர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.6 | 04.06.2022 | மாதிரி வரைபடம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.7 | 10.09.2022 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.2 |
| அ.சா.ஆ.8 | 10.09.2022 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.9 | 10.09.2022 | படிவம்-91(சிபி எண்.149/2022) | அ.சா.2 |
| அ.சா.ஆ.10 | 08.06.2022 | காயச்சான்று | அ.சா.2 |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்:**

அசாபொ.1 - அரிவாள் -1,

**3 வது எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.06.01 15:39:03 +0000

நீதித்துறை நடுவர் எண்.I,

தஞ்சாவூர்.

<u>**குறிப்பு:**</u>

1) வழக்கு விசாரணையின் போது எதிரி ஜாமீனில் இருந்தார்.

2) எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.